# சிலுவைப்பாதை

## தொடக்க செபம்

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!

எல்லோரும்: இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச்சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

**சுருக்கமான மனத்துயர் செபம்:**

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன்.

*எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக,*

*இறைவா, என்மேல் இரக்கமாயிரும்.*

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### சிலுவைப்பாதை நிலையின் தொடக்கத்தில்

இயேசு கிறிஸ்து பாடுபட்ட ----ஆம் நிலை

இயேசுவே! உமது திருச்சிலுவையை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஏனெனில் உமது திருச்சிலுவையால் நீர் எங்களை மீட்டருளினீர்.

### சிலுவைப்பாதை நிலையின் முடிவில்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே

எங்கள் மேல் இரக்கமாயிரும் - 2

இறந்த நம்பிக்கையாளர்கள் உமது இரக்கத்தினால் உம்மில் நிறைவாழ்வு பெறுவார்களாக! ஆமென்.

## முன்னுரை

சப்தமில்லாமல், சலனமில்லாமல், யுத்தமில்லாமல் சமூக மாற்றத்திற்காக, இதோ ஓர் உன்னத மனிதரின் அமைதியான சிலுவை ஊர்வலம். பழி சுமத்தப்பட்டு நிற்கும் மாசற்ற செம்மறியின் மௌன ஊர்வலம். அடித்தனங்களை தட்டிக் கேட்டவரின் அமைதி ஊர்வலம்.

மரணம் நிச்சயம் எனத் தெரிந்தும், துணிவோடு செல்லும் பணிவுமிக்கவரின் சிலுவை ஊர்வலம். சுயலாபம் தேடும் அரசியல் ஊர்வலம் அன்று. ஆன்மாக்களை மீட்கும் உன்னதரின் ஊர்வலம். அன்பை, அரவணைப்பை, பாசத்தினை, பகிர்வினைப் பறைசாற்றும் தியாகசீலரின் ஊர்வலம். ஆண்டாண்டு காலமாய் பெரிய வெள்ளிக்கிழமை மட்டும் நினைவு கூரப்படும் சடங்கு ஊர்வலமாய் கருதாமல் இதன் வழியாய் ஆண்டவரை நெருங்க, அனுபவிக்க, இறுகப் பற்றிக்கொள்ள நம்மை அழைக்கும் ஊர்வலம் இது. பார்வையாளராய் இருந்துவிடாமல் இயேசுவின் இலட்சிய ஊர்வலத்தில் பங்கேற்பாளராய் மாறி அவருடன் பயணிப்போம்.

## முதல் நிலை

### நிரபராதி இயேசு அதியாயத் தீர்ப்பிடப்படுகிறார்.

ஆற்றலும், வல்லமையும் உள்ள இறைமகன், தன்னைக் குற்றவாளி என சபை கூறிய போதும், மரணத்திற்கு தன்னைக் கையளித்த போதும் அமைதியே உருவமாக அப்படியே நிற்கிறார். ஏன்? நம்மீது கொண்ட இரக்கத்தால் தான். சொற்கள் எனும் கற்களால் இயேசு மரணத் தீர்ப்பிடப்படுகிறார். அன்று அவர்கள் பேசிய சொல் உயிரைக் கொன்றது. ஆனால் இயேசு பேசிய சொல் உலகை வென்றது.

தண்டனைத் தீர்ப்புத் தவிர்ப்போம்

தவறுகள் மன்னித்து ஏற்போம்.

திறனாய்வு செய்து திறமை வளர்ப்போம்

**செபம்**

எங்கள் குடும்ப, சமூக வாழ்வில் நாங்கள் தீர்ப்பிட்டுத் தண்டிப்பதை தவிர்க்கவும், குடும்ப உறவுகளின் திறமையைத் தெரிந்து வளர்க்கவும் உமது ஆற்றலைத் தந்தருளும். ஆமென்

## இரண்டாம் நிலை

### சுமை தாங்கியாகிறார் இயேசு.

சுமைகள் சுகமானதல்ல. நாம் நம் குடும்பத்திற்காக, வருமானத்திற்காக, பெயருக்காக, புகழுக்காக சுமக்கும் சுமைகள் வேண்டுமானால் சுகமான சுமைகளாக இருக்கலாம். ஆனால் பிறருக்காகச் சுமக்கும் சிறு துரும்பு கட பெருஞ்சுமையாய் தெரிகிறது. இங்கே இரக்கம் இல்லாதவர்களால் பாரமான சிலுவை இயேசுவின் தோள்களில் அழுத்துகிறது. இச்சுமையை நம்மீது கொண்ட அன்பினால் ஏற்கிறார் இயேசு. சுமைகளைச் சுமந்து செல்கின்றவர்கள் தான் சமூக வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்துகின்றார்கள். "எத்தனை இடர்கள் முன்வரினும் துணிந்து நிற்பவருக்கு சிலுவைகள் ஒரு பொருட்டல்ல". "நெஞ்சில் குறிக்கோள் சுமக்கும் தொண்டர் சிலுவைகள் ஏற்கக் காட்டுவதில்லை தயக்கம்"

**செபம்**

எங்கள் அன்பு இறைவா! எங்கள் சுமைகளை சுயநலத்திற்காகச் சுமக்காமல், பிறர்நலத்திற்காக, உமது அன்பிற்காக சுமக்க வரம் தாரும். ஆமென்.

## மூன்றாம் நிலை

### இயேசுவின் லட்சியப் பயணத்தில் முதல் எழுச்சி.

விழல் இல்லாமல் எழல் இல்லை. அதற்காக விழுந்தே கிடப்பதும் வாழ்வு இல்லை. நாம் நம் குடும்பத்திற்காக, உறவுகளுக்காக, சொந்த பந்தங்களுக்காக விழுவோம். ஆனால் உறவேதும் இல்லா நமக்காக இறைமகன் மண்ணில் முதன்முறை விழுகிறார். பிடிபட்ட நேரம் முதல் அடிபட்ட நாயகர், துன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்த தூயவர், முதன் முறை கீழே விழுகின்றார். இனியும் பாவம் செய்வோமா? வாழ்வில் வருத்தங்களோடு கண்ணீரோடு, துவண்டு போயிருக்கும் குடும்பங்களுக்கு நம்மாலான உதவிக்கரம் நீட்டி எழுப்பிவிட முன்வருவோமா? இவர்கள் தான் இடறிவிழும் இயேசுவுக்கு எழுந்து நிற்கும் பலத்தைத் தருபவர்கள். வீழ்ந்து வெதும்பிக் கிடப்பதற்கன்று வாழ்வு, எழுத்து நடப்பதில் வெளிப்படட்டும் நம் துணிவு.

**செபம்**

வீழ்ந்தாலும் எழுந்து நடந்த இயேசுவே, நாங்கள் வீழ்ந்த இடத்தில் வெதும்பிக் கிடந்தாலும் எழுந்து நடக்க உமது கரம் நீட்டியருளும். ஆமென்.

## நான்காம் நிலை

### அன்னையின் சந்திப்பால் ஆக்கம் பெறும் இயேசு.

தாயும், அவமானச் சிலுவையோடு மகனும் சந்திக்கிறார்கள். இருவரின் உள்ளங்களும் என்ன பாடுபட்டிருக்கும்? இதயம் கருகியது போல கொடுமையாய் இருந்திருக்கும் அல்லவா? ஆனாலும் இயேசுவின் முகத்தில் அன்னையின் பார்வை ஓர் அணைப்பைத் தருகிறது. உடல் வலிக்கும் மன வலிக்கும் சற்று மருந்திடுகிறது. வேதனையிலும் ஒரு மகிழ்ச்சியையும் திட நம்பிக்கையையும் தருகிறது. மகனைத் துன்பங்களே தெரியாமல் வளர்ப்பவர் நல்ல அம்மா. மகனைத் துன்பங்களைச் சந்திக்கவிட்டு, எதிர்கொள்ளத் துணை நிற்பவர் சிறந்த அப்பா, தாய் தந்தையின் அருமை நீ வளரும் போது தெரியாது. நீ உன் பிள்ளைகளை வளர்க்கும்போது தான் புரியும்.

**செபம்**

மாட்சிமை பொருந்திய இயேசுவே, நாங்கள் பல நேரங்களில் எங்கள் தாய் சொல் கேட்காது, தவறியிருக்கிறோம், பெண்மையை மாசுபடுத்தி இருக்கிறோம். தாய்மையை மதிக்கவும், பெண்மையைப் போற்றவும் அறிவினை தாரும் இறைவா! ஆமென்.

## ஐந்தாம் நிலை

### சிலுவையின் சுமையைச் சற்றுச் சுகமாக்கும் சீமோன்.

தன் உழைப்பின் களைப்பு, பயணக் களைப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சுமையை சுகமாக்க முன்வருகிறார் சீமோன். சீமோனின் இளகிய மனதால் இயேசு தன் வேதனையில் சிறிது ஓய்வு கண்டார். மனிதனை மீட்க கடவுள் எடுத்த முயற்சியில் மனிதருடைய ஒத்துழைப்பும், தோழமையும் கண்டிப்பாக தேவை என்பதை இங்கே சீமோன் மூலம் தெளிவுபடுத்துகிறார் இயேசு. இன்றும் பல மனிதர்கள் உதவிக்காக ஏங்கி நிற்கிறார்கள். பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்யப்படுகிற உதவிகள்தான் இங்கு ஏராளம். நம் அருகில் சிலுவைகளைச் சுமக்க முடியாமல் உதவிக்காக ஏங்கி நிற்கும் பல இயேசுக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதை உணர்த்தவே இயேசுவின் பாடுகள்.

**செபம்** இறைவா இவ்வுலகில் வேடிக்கை பார்க்கும் மனிதர்களாக வாழாமல், கனிவு கொண்ட உள்ளத்தோடு பிறருக்கு உதவி செய்யும் மனிதர்களாக வாழ வரம் தாரும். ஆமென்.

## ஆறாம் நிலை

### துன்பத்தில் துயர் துடைக்கும் வெரோணிக்கா.

“தயங்குபவனால் சிலந்தி வலையைக்கூட அசைக்க இயலாது, ஆனால் துணிந்தவன் இரும்பு வலையைக்கூட முறித்து விடுவான்” அநீதியான தண்டனை என்று அறிந்திருந்தும், ஆண்கள் கூட தைரியம் இழந்து மௌனித்திருக்க, பெண்களை அடிமைப்படுத்தும் யூத சமூகத்தில், வீர நெஞ்சத்துடன் இயேசுவின் திருமுகத்தை துடைத்து வரலாறு படைக்கிறாள் வெரோணிக்காள். இந்த வீரப் பெண்மணி போல தூசு படிந்துள்ள மானிடத்தைக் கொஞ்சமாவது சீர்மைக்க முன்வருவோம். பெண்களைக் காட்சிப் பொருளாய் ஒதுக்கி விடாமல், சமத்துவ கொள்கையோடு முன்னேற கரம் கோர்ப்போம். அடைந்து கிடக்கும் வரைதான் பெண் அடிமை. ஆனால் எழுந்து விட்டால் கட்டுப்படுத்த இயலாத ஆற்றல். எனவே வெரோணிக்காவைப் போல மாற்றம் பெறுவோம் ஆற்றலோடு.

**செபம்**

உறவின் உன்னதராம் இறைவா, ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் முழு மானிடம் என்று உணர்ந்து, எங்கள் குடும்பம் தாண்டி பரந்து விரிந்த இவ்வுலகத்தை மீட்கும் பணியில் எங்களையும் இணைத்தருளும். ஆமென்.

## ஏழாம் நிலை

### இயேசுவின் இலட்சியப் பாதையில் இரண்டாம் எழுச்சி.

அடிகள் பட்ட தேகம், அலைந்து துவண்ட கால்கள், உடலை விட்டுப் பிரிந்த குருதி என கால்களை எடுத்து வைக்க இயலாமல் தள்ளாடும் இயேசுவை பூமி தன் மார்பில் தாங்குகிறது. நம்பிக்கை மலைகளைத் தகர்க்கும். தன்னம்பிக்கை சாதிக்கப் பார்க்கும். இயேசு இரண்டாம் முறை வீழ்ந்தாலும் தனது கொள்கையிலும், இலட்சியத்திலும் பின்வாங்காமல் எழுந்து பீடு நடை போடுகிறார். கருவறையை விட்டுக் கீழே இறங்கி, கல்லறையை நோக்கி கடந்து செல்லும் தூரம் தான் வாழ்க்கை. காயப்படுத்த பலர் இருந்தாலும், மருந்தாக சிலர் இருப்பதாலேயே வாழ்க்கை அடுத்தக்கட்டத்தை நோக்கிப் பயணிக்கிறது. தவறான பயணத்தால் வாழ்க்கையில் வீழ்ந்து கிடப்பவர்கள் ஏராளம். அவர்களை எழுப்பிவிட முனைவோம். இப்பணிகளை நாம் செய்தால் நிறைய இயேசுக்கள் எழுந்து நடப்பார்கள்.

**செபம்** அன்பு இறைவா! விழுவதும் எழுவதும் அன்றாட நிகழ்வுகள் தான் என்பதை உணர்ந்து தடுமாற்றங்களும் தடங்கல்களும் எங்களைச் சூழ்ந்து, கொண்டாலும் தன்னம்பிக்கையோடு எழுந்து நடக்க ஆற்றல் தாரும். ஆமென்

## எட்டாம் நிலை

### இயேசுவின் பயணத்தில் ஆறுதல் தரும் பெண்கள்.

கண்ணீர் அன்பின் வெளிப்பாடு, இயலாமையின் வெளிப்பாடு, கவலைக்கு அருமருந்து. இயேசுவே உமக்கா இந்த நிலை? என்று எருசலேம் பெண்கள் கதறி கண்ணீர் விடுகின்றனர். இயேசுவினால் நற்சுகம் பெற்ற பெண்களால், இயேசுவின் துன்பத்தைப் பார்த்து அழாமல் இருக்க இயலவில்லை. பிறர் துன்பத்தைப் பார்த்து கன்ணீர் விடுவது பென்களின் இயல்பான குணம், பலவீனமும் கூட. இயேசு அவர்களின் இயலாமையையும் பலவீனத்தையும் கண்டு, “பச்சை மரத்திற்கே இப்படியென்றால், பட்ட மரமாகிய உங்களுக்கு என்ன நேரிடும்? உங்களுக்காக கவலைப்படுங்கள்” என ஆறுதல் கூறுகிறார். பெண்மையைப் போற்றுகிறார். கூலி கொடுக்காத ஏவலர்களாகப் பெண்களைப் பயன்படுத்தி வீசி எறியாது, அவர்களின் படைப்பாற்றலைக் கண்டு வளர்ச்சி ஏற்படுத்தும் சமூகமாக வாழ்வோம். இயேசுவின் இறையாட்சிக்கு சான்று பகர்வோம்.

**செபம்** ஆறுதல் வழங்கும் இறைவா, நாங்கள் பிறருடைய துன்பங்களுக்கு ஆறுதலாக இருக்கவும் அவர்களுடைய காயங்களுக்கு மருந்தாக மாறவும் எங்களுக்கு வரம் தாரும். ஆமென்.

## ஒன்பதாம் நிலை

### இயேசுவின் பயணத்தில் மூன்றாம் எழுச்சி.

முட்களால் கீறப்பட்ட சிரசு, கற்களால் கிழிக்கப்பட்ட கால்கள், சாட்டைகளால் பிளக்கப்பட்ட தோல்கள் என அனைத்து இரணங்களும் இயேசுவை மூன்றாம் முறை மண்ணை முத்தமிடச் செய்கிறது. விதையின் வீழ்ச்சி விருட்சத்தின் எழுச்சி. சூரியனை மேகம் மறைப்பது நிரந்தர வீழ்ச்சி அல்ல. மீண்டும் சூரியன் பிரகாசிக்கும், விடியல் தோன்றும். இயேசுவின் வீழ்தலும் விடியலுக்கான வீழ்தலே, மானிடம் மீட்படைய எழுந்த மறுவாழ்வின் எழுச்சி. தமது கொள்கைக்காக கொடுமையான சாவை ஏற்றார் இயேசு. நமது கொள்கைகளைச் சற்று யோசிப்போம். உலகச் சிற்றின்பங்களில் இருந்து வெளியே வருவோம். இலட்சியமற்ற வாழ்விலிருந்து வெளியே வருவோம். நமது இயலாமை, பலவீனத்தால் விழுந்தாலும், இயேசுவைப் போல் மீண்டும் எழ வேண்டும் என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வோம்.

**செபம்** விடுதலையின் இறைவா, வீழ்ந்தாலும் வீரமுடன் எழவும், தடம் மாறினாலும், தடுமாறினாலும், தரமுடன் வாழ, உரமுடன் உறவாட, உம்மைப் போல் வெற்றி நடை போட வரம் தாரும். ஆமென்.

## பத்தாம் நிலை

### தன் ஆடைகளை இழக்கிறார் இயேசு.

எவரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெண்மையான ஆடை, நோயுள்ள பெண் தொட்டதால் குணப்படுத்திய ஆடை, கொடிய மனம் கொண்டவர்களால் களையப்படுகிறது. ஆதாம் - ஏவாள் வெட்கத்தால் ஆடை அணிந்தார்கள். இயேசுவோ தந்தையின் அன்பை உணர்த்த, தனது ஆடையை இழந்தார். இழப்பதற்கென இனி அவரிடம் எதுவுமில்லை. கைகளால் கூட தன்மானத்தை காத்துக்கொள்ள அவர் அனுமதிக்கப்படவில்லை. ஆடைகளை அகற்றி அவரின் ஆளுமையைச் சிதைக்க நினைத்தார்கள். அவரின் ஆடைகளைப் பங்கிட்டார்கள். ஆனால் அவரது ஆளுமையை அசைக்க இயலவில்லை. நமது வாழ்வில் வெளித்தோற்றங்கள் தற்காலிகமானவை. பொருட்களால் உருவாவதில்லை நம் ஆளுமை. நம் எண்ணங்களால் நாம் உயர்ந்து நிற்க வேண்டும். பிறர் வாழ்வு சிறக்க நம் உடைகளை அல்ல, உடைமைகளை இழக்க முன்வருவோம்.

**செபம்**

தன்னையே வெறுமையாக்கிய இறைவா! நாங்களும் எங்களை எளிமையாக்கி பிறர் வாழ்வுக்கு எங்களால் முடிந்ததை முழுமனதோடு செய்ய வரமருளும். ஆமென்.

## பதினொன்றாம் நிலை

### மூன்று ஆணிகளுக்குள் அடக்கப்படுகிறார் இயேசு.

அகிலத்தையும் படைத்து ஆளப் பிறந்தவர் சின்ன ஆணிகளால் அடக்கப்பட்டுவிட்டார். குணமளித்த கரங்களும், குன்றுகள் ஏறி நற்செய்தி அறிவித்த கால்களும் சிலுவையில் சிறைப்படுத்தப்பட்டன. ஆனால் சிலுவை அவரைச் சிறைப்படுத்தவில்லை. “தந்தையே முடியுமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும்” என்ற வார்த்தைகளின் உள் அர்த்தம் தாங்க முடியா வலி அல்லவா? சிலுவையில் தொங்கும் இயேசுவைக் காணும்போதெல்லாம் சிறுமைகளைக் களைந்து, சீர்மிகு மகிமையைப் பறைசாற்றும் மனிதர்களாக வலம் வருவோம். கிறிஸ்தவர்களாக நம்முடைய சிலுவையையும் பிறருடைய சிலுவையையும் சுமக்கும் மறுகிறிஸ்துவாக வாழ முயல்வோம். இல்லாதவர்களுக்கும் இயலாதவர்களுக்கும் கொடுத்து வாழ்வோம்.

**செபம்** உயிர் வழங்கும் உறவின் இறைவா! எங்கள் சுயநல ஆசாபாசங்களைக் களைந்து, தற்புகழ்ச்சி களைந்து, பிறர் வாழ்வு செழிக்கவும் இறைவனின் மகிமை ஓங்கவும் உழைத்திட வரம் அருளும். ஆமென்.

## பன்னிரண்டாம் நிலை

### இயேசு தன்னுடைய உயிரைத் தந்தையிடம் ஒப்படைக்கிறார்.

மக்களை மீட்க வேண்டுமென்ற எண்ணம், மனதில் துணிவு, திட்டமிட்டச் செயல்பாடு, காரியத்தில் பின்வாங்காமை. நேர்மையான வழி இவற்றின் வெளிப்பாடுதான், “எல்லாம் நிறைவேறிற்று” என்று கூறி நம் மீட்பிற்காக, தந்தையின் கரத்தில் உயிரை ஒப்படைக்கிறார். இயேசுவின் மனதில் ஒரு நிம்மதிப் பெருமூச்சு, இயேசுவின் இறப்பு இயேசுவுக்குக் கிடைத்த தோல்வி என ஆர்ப்பரிக்கிறார்கள் கொடியவர்கள். இயேசுவின் சாவு, தோல்வி அல்ல. அவருடைய வாழ்விற்கு கிடைத்த வெற்றி. மனித வரலாற்றில் மக்களுக்காக உழைத்த மாமனிதருக்கு கிடைத்த பரிசுதான் சிலுவைச்சாவு. அடிமைகளின் விடுதலைக்காக உழைத்த ஆபிரகாம் லிங்கனுக்கும், கருப்பு இனத்தவர்களின் சமத்துவத்திற்காக போராடிய மார்ட்டின் லூதருக்கும், நாட்டின் விடுதலைக்காக போராடிய காந்தியடிகளுக்கும் கிடைத்த பரிசு துப்பாக்கி குண்டுகளே. இவர்களின் சாவெல்லாம் தோல்வியல்ல. பிறருடைய வாழ்வின் உதயம். இறைவாக்கினர்களின் இறப்பு, புது மனிதத்தின் பிறப்பு.

**செபம்** எங்களுக்காக சிலுவையில் மரித்து புது வாழ்வைக் கொடுத்த இறைவா, நாங்களும் பிறருக்காக தியாகம் செய்ய முழுமையாக நல்ல இதயம் தந்து எங்களையே இழக்கவும் வரமருளும். ஆமென்.

## பதிமூன்றாம் நிலை

### அன்னை மரியின் மடியில் இயேசுவின் உடல்.

வேதனையின் உச்சத்தில் ஒரு விசித்திர தாலாட்டு. தாயின் மடிதான் உலகம் என தாய் அன்பைக் கண்டவர் உயிரற்ற உடலாய் கிடத்தப்படுகின்றார். உயிரற்ற தன் மகனின் உடலை தன் மடியில் சுமக்கும் துயரினைச் சொற்களால் விவரிக்க முடியுமா? துன்பத்திலே பிறப்பு கொடுத்து, வாழ்விலே தோள் கொடுத்து, இறப்பிலே இணைந்து நின்று, தாயின் கடமையை முழுமையாக முடிக்கின்றாள். அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை. விலைமதிப்பில்லா தூயது தாயன்பு. ஓர் உறவு நம்மையே சுற்றி வருகிறது என்றால் போவதற்கு வேறு இடம் இல்லாமல் இல்லை. நம்மை இழக்க மனமில்லாமல் தான். வார்த்தைகளே இல்லாத வடிவம், அளவுகோலே இல்லா அன்பு, சுயநலமில்லா இதயம், வெறுப்பைக் காட்டாத முகம், அம்மாவை சுமையாக எண்ணாமல், சுகமாய்ப் பேணுவோம்.

**செபம்** அன்பான இறைவா, எங்களது தாய் தந்தையரை உளமார நேசிக்க, மதிக்க பக்குவமான இதயத்தைத் தந்தருளும். ஆமென்.

## பதினான்காம் நிலை

### இயேசுவின் சகாப்தம் மண்ணில் விதைக்கப்படுகிறது.

இரக்கத்தின் இறைவன் மாற்றானுக்காகப் பிறந்து வளர்ந்து, நற்பணி செய்து, இறுதியில் இறந்து மாற்றானின் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார். காலத்தினைக் கடந்தவர். எல்லாமே நிறைந்தவர். உலகத்தையே தன்னுடைய உரிமைச் சொத்தாகக் கொண்டவர். தனக்கென்று ஒரு இடத்தை ஏற்பாடு செய்யாமல் போய்விட்டார். அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பு தன்னுடைய இடத்தை இயேசுவின் கல்லறைக்காக கொடுக்க முன்வருகிறார். இவர் தான் புனித வாழ்வுக்கு அழைப்பு பெற்றவர். இவரின் நல் மனத்தால் இரவல் கல்லறையில் இயேசுவின் சகாப்தம் விதைக்கப்பட்டது. நாமும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இறப்பு என்பது நிச்சயம். நம் கடைசி தேவை ஆறடி நிலம் மட்டுமே. விழுந்தாலும் விழுதாகும் மரமானார் இயேசு. நம் வாழ்வும் மரணத்தோடு முடிவதில்லை. மாறாக பிறரின் எண்ணங்களில் வாழ, வார்த்தைகளில் வாழ, வாழ்க்கையில் வாழ நல்லதையே அதிகம் செய்வோம். நல் உறவுகளை கரம்பிடித்துக் கொள்ள நமது வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம். நீ சிரித்துப் பார்? என் முகம் உனக்குப் பிடிக்கும். மற்றவர்களை சிரிக்க வைத்துப் பார் உன் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.

**செபம்** மரணத்தை வென்ற எங்கள் அன்பு இயேசுவே! எங்கள் பாவங்களைப் புதைத்து புதிய மனிதர்களாக உம்மில் உயிர்க்க எங்களுக்கு அருள் தாரும். ஆமென்

## சிலுவைப்பாதை முடிவில்

பொறுத்தருளும் கர்த்தாவே! உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

என்றென்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் சுவாமி.

தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

## திருத்தந்தையின் கருத்துக்களுக்காக…

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

புனித மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். / ஆமென்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!

**நன்றி: திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**